
# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 15: பரலோக மாதிரி

**யாத்திராகமம் 24:1-25:9**

### நடந்த கதை . . .

இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க ஆண்டவர் செய்த அடையாளங்களையும் அற்புதங்களையும்போல் முன்பு செய்ததே இல்லை. பார்வோனின் ராஜ்யமெங்கும் ஒவ்வொரு வாதையாக உண்டானது; கடைசியாகத், தன் அடிமைகளை விடுதலைசெய்தான். பிறகு, சிவந்த சமுத்திரத்தைப் பிளந்து, புதிதாகப் பிறந்த அந்தத் தேசத்தினரை ஆண்டவர் விடுதலையாக்கினார்; எதிரிகளைத் தண்ணீரில் மூழ்க்கிப்போட்டார்.



வனாந்தரத்திற்குள் வந்ததும், தேவன் அவர்களைத் தெற்கு நோக்கி வழிநடத்தினார்; அநேகருக்கு ஆச்சரியம்! ஏனென்றால் வாக்குத்தத்த தேசம் அதற்கு நேரெதிரே இருந்தது. மக்கள் தங்கள் சுதந்தரத்தைப் பெறுவதற்கு ஆயத்தப்படுத்தவேண்டும்; தம்மை நம்புவதற்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதை ஆண்டவர் முன்னரே அறிந்திருந்தார். அவர்கள் சீனாய் மலைக்குப் போகும் வழியில் அவர்களின் ஒவ்வொரு தேவையையும் ஆண்டவர் சந்தித்தார். அவர்களுக்குப் பசித்தபோது, பரலோக அப்பத்தால் அவர்களைப் போஷித்தார். அவர்களுக்குத் தாகம் உண்டானபோது, ஒரு கற்பாறையிலிருந்து தண்ணீர் ஓடிவரச் செய்தார். பின்னாலிருந்து எதிரிகள் அவர்களைத் திடீரெனத் தாக்கியபோது, அற்புதவிதமாக வெற்றிபெற்றார்கள்.

இறுதியாக, அந்தப் பரிசுத்த பர்வதத்தின் அடிவாரத்தில் முகாமிட்டார்கள். அதுவரையிலும், அதன்பிறகும் தாம் செய்திராத ஒன்றை தேவன் அங்குச் செய்தார். இஸ்ரவேல் தேசத்தார் அனைவரும் கேட்டுக்கொண்டிருக்க, தம் உடன்படிக்கையாகிய பத்துக்கற்பனைகளைச் சொன்னார். ஆண்டவர் தம் கற்பனைகளைப் பேசிச் சொன்னபிறகு, அந்தக் கற்பனைகள் எழுதப்பட்ட கற்பலகைகளைப் பெற்றுக்கொள்ள மோசேயை சீனாய் மலைமேல் ஏறி வருமாறு ஆண்டவர் அழைத்தார். மேலும், வேறொன்றையும் தேவன் கொடுத்தார். 40 நாள் இரவும்பகலும் மலையில் ஆண்டவரோடு மோசே இருந்தார்; அப்போது, தேவனுக்கென்று ஓர் அழகிய, நடமாடும் ஆலயத்தைக் கட்டுவதற்கு விலாவாரியான விபரங்களைப் பெற்றர். பரலோகத்தில் தேவன் வாசஞ்செய்யும் ஆலயத்தின் ஒரு சிறிய மாதிரியாக அது இருந்தது. பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்கும் தேவதிட்டத்தை உலகிற்கு வெளிப்படுத்தும் முப்பரிமாணக் கருத்துப்படிவமாக அந்த விசேஷித்த அமைப்பு விளங்க இருந்தது.

## ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. மோசேயிடம் தேவன் என்ன கட்டச் சொன்னார்? ஏன்?**

**யாத்திராகமம் 25:8.** அவர்கள் நடுவிலே நான் ________________, எனக்கு ஒரு ________________ ________________ உண்டாக்குவார்களாக.

**2. ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தும், அதன் முறைமைகளிலிருந்தும் தமது மக்கள் என்ன கற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் எதிர்பார்த்தார்?**


**சங்கீதம் 77:13.** தேவனே, உமது ____________ பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது.

**குறிப்பு:** தேவனுடைய வழி, அல்லது இரட்சிப்பின் திட்டத்தை பூலோக ஆசரிப்புக்கூடாரம் வெளிப்படுத்தியது. ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து ஒவ்வொன்றும், அதன் ஆராதனைகளும், நம்மை இரட்சிக்க இயேசு என்னசெய்யப் போகிறாரென்பதற்கு அடையாளமாக இருந்தன. ஆசரிப்புக் கூடாரத்தையும் அதன் ஆராதனைகளையும் புரிந்துகொள்ளாவிட்டால், இரட்சிப்பின் திட்டம் பற்றி முற்றிலும் விளங்கிக்கொள்ளமுடியாது. இரட்சிப்பின் வேலையை விவரிக்கும் முப்பரிமாண விளக்கப்பொருளாக அது இருந்தது.

**3. ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரி வரைபடம் மோசேக்கு எப்படிக் கிடைத்தது?**

**யாத்திராகமம் 25:40.** ________________ உனக்குக் காண்பிக்கப்பட்ட ________________ அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு.

**குறிப்பு:** ஆசரிப்புக்கூடாரக் கட்டுமான விபரம் உட்பட அதன் முழு வரைபடத்தையும் சீனாய் மலையில் மோசேயிடம் தேவன் கொடுத்தார். (எபிரெயர் 8:5). பரலோகத்தில் தேவனுடைய மெய்யான வாசஸ்தலத்தின் மாதிரியாக இது இருந்தது.




முதல் வாசஸ்தலம் அல்லது ஆசரிப்புக் கூடாரமானது ஒரு கூடார அமைப்பில் இருந்தது. (15 அடி × 45 அடி). தேவனுடைய தெய்வீக பிரசன்னம் அங்கு இருந்தது. விசேஷித்த ஆராதனைகள் நடைபெற்றன. ஆசரிப்புக்கூடாரச் சுவர்கள், நிமிர்ந்துநிற்கும் சீத்திம் மரப்பலகைகளால் செய்யப்பட்டிருந்தன; வெள்ளிப் பாதங்களில் அவை நடப்பட்டிருந்தன; பொன்தகட்டால் மூடப்பட்டிருந்தன. (யாத் 26:15–19, 29). மெல்லிய பஞ்சு நூல், ஆட்டு மயிர், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல், தகசுத்தோல் ஆகிய நான்கு அடுக்குகளால் கூடாரம் மூடப்பட்டிருந்தது. (வச 1,7,14).



அதில் இரண்டு அறைகள் இருந்தன. பரிசுத்த ஸ்தலம் (15 அடி × 30 அடி); மகாபரிசுத்த ஸ்தலம் (15 அடி × 15 அடி). இந்தப் பாடத்தை நீங்கள் வாசிக்கும்போது மேலுள்ள படத்தைப் பாருங்கள்.

**4. பிராகாரத்தில் என்ன இருந்தது?**

**யாத்திராகமம் 29:18.** ஆட்டுக்கடா முழுவதையும் ________________ தகித்துவிடுவாயாக; இது கர்த்தருக்குச் செலுத்தும் ________________ தகனபலி.

**யாத்திராகமம் 30;18.** வெண்கலத்தால் ஒரு ________________ ... உண்டாக்கி, ... அதிலே தண்ணீர் வார்ப்பாயாக.

**குறிப்பு:** தகன பலிபீடத்தில் (யாத் 27:1–8) மிருகங்கள் பலியிடப்பட்டன. ஆசரிப்புக் கூடாரத்தின் நுழைவு வாயிலுக்குச் சற்று வெளியே, பிராகாரத்தில் அந்தப் பலிபீடம் இருந்தது. கிறிஸ்துவின் சிலுவையை அது சுட்டிக்காட்டியது. பலிமிருகமானது மெய்யான பலியான இயேசுவைச் சுட்டிக்காட்டியது. யோவான் 1:29. ஆசரிப்புக்கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே கழுவுகிறதற்கு வெண்கலத்தாலான ஒரு பெரிய தொட்டி வைக்கப்பட்டிருந்தது. யாத் 30:17–21; 38:8. ஆசரிப்புக் கூடாரத்திற்குள் நுழையும்முன் அல்லது பலியிடுமுன் ஆசாரியர்கள் தங்கள் கை, கால்களை அதில் கழுவினார்கள். ஞானஸ்நானத்தையும், பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதையும், புதிய பிறப்பையும், அந்தத் தண்ணீர் சுட்டிக்காட்டியது.

**5. பரிசுத்த ஸ்தலத்தில் என்ன மூன்று பொருட்கள் இருந்தன?**

**அ. எண்ணாகமம் 4:7.** ________________ ________________ மேல் நீலத் துப்பட்டியை விரித்து, ... நித்திய அப்பமும் அதின்மேல் இருக்கக்கடவது.

**ஆ. எண்ணாகமம் 8:2.** நீ விளக்குகளை ஏற்றும்போது ஏழு விளக்குகளும் ________________ நேரே எரியவேண்டும்.

**இ. யாத்திராகமம் 30:1.** ________________ ஒரு ________________ சீத்திம் மரத்தினால் உண்டாக்குவாயாக.

**குறிப்பு:** சமுகத்தப்ப மேஜை (யாத் 25:23–30) ஜீவ அப்பமாகிய (யோவான் 6:51) இயேசுவைச் சுட்டிக்காட்டியது. ஏழு கிளைகளுள்ள குத்துவிளக்கு (யாத் 25:31–40) உலகத்தின் ஒளியாகிய இயேசுவைச் சுட்டிக்காட்டியது. யோவான் 9:5; 1:9. விளக்குக்கான எண்ணெய் பரிசுத்த ஆவியைச் சுட்டிக்காட்டியது. சகரியா 4:1–6; வெளிப்படுத்தல் 4:5. தூபபீடமானது (யாத் 30:1–8) தேவ மக்களின் ஜெபங்களைச் சுட்டிக்காட்டியது. எபிரெயர் 5:7.

**6. மகா பரிசுத்த ஸ்தலத்தில் என்ன ஒரு விசேஷித்த பொருள் இருந்தது?**

**யாத்திராகமம் 26:34.** மகா பரிசுத்த ஸ்தலத்திலே சாட்சிப் ________________ மீதில் கிருபாசனத்தை வைப்பாயாக.

**குறிப்பு:** மகா பரிசுத்தஸ்தலத்தில் ஒரே ஒரு பொருள்தான் இருந்தது. சீத்திம் மரத்தால் செய்து, பொன்தகட்டால் மூடப்பட்ட சாட்சிப்பிரமாணப் பெட்டி. யாத்25:10–22; அந்தப் பெட்டிக்குமேலே பொன்தகட்டால் செய்யப்பட்ட இரு கேருபீன்கள் இருந்தன. அந்தப் பெட்டியின் மூடி கிருபாசனம் எனப்பட்டது (யாத் 25:17–22); தேவ பிரசன்னம் அங்கு வாசஞ்செய்தது. பரலோகத்தில் இரு தூதர்கள் மத்தியில் இருக்கும் தேவனுடைய சிங்காசனத்தை அந்த இடம் சுட்டிக்காட்டியது. சங்கீதம் 80:1; ஏசாயா 6:1,2.

**7. உடன்படிக்கைப் பெட்டிக்குள் என்ன இருந்தது?**

**யாத்திராகமம் 25:21.** கிருபாசனத்தைப் பெட்டியின்மீதில் வைத்து, பெட்டிக்குள்ளே நான் உனக்குக் கொடுக்கும் ________________ வைப்பாயாக.

**உபாகமம் 10:4,5.** பத்துக்________________ அவர் (தேவன்) முன் எழுதியிருந்தபிரகாரம் அந்தப் பலகைகளில் எழுதி, அவைகளை என்னிடத்தில் தந்தார் ... அப்பொழுது நான் திரும்பி மலையிலிருந்து இறங்கி, அந்தப் பலகைகளை நான் செய்த பெட்டி__________ வைத்தேன்; கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டபடியே அவைகள் அதிலே வைத்திருக்கிறது.

**குறிப்பு:** இரண்டு கற்பலகைகளில் தேவன் தம்முடைய விரல்களாலே தம் உடன்படிக்கையை எழுதினார்; அவை உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டன. அவற்றிற்கு மேலேதான் கிருபாசனம் இருந்தது; தேவபிள்ளைகள் தங்கள் பாவங்களை அறிக்கைசெய்து, அவற்றை விட்டுவிட்டால் (நீதிமொழிகள் 28:13), ஆசாரியன் கிருபாசனத்தில் தெளிக்கும் இரத்தத்தின் மூலம் அவர்களுக்குக் கிருபை காட்டப்படும் என்பதை அது சுட்டிக்காட்டியது. லேவி 16:15,16. சகல மனிதரும் பாவமன்னிப்பையும் சுத்திகரிப்பையும் பெறும்படி இயேசு சிந்தின இரத்தத்தை அந்த இரத்தம் சுட்டிக்காட்டியது. மத்தேயு 26:28; எபிரெயர் 9:22.

**8. பழையஏற்பாட்டு ஆசரிப்புக்கூடார ஆராதனைகளில் மிருகங்கள் ஏன் பலியிடப்பட வேண்டியிருந்தது?**

**எபிரெயர் 9:22.** __________ *சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.*

**மத்தேயு 26:28.** *இது* ____________________ *அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைகுரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*

**குறிப்பு:** மிருகங்களைப் பலியிடுவது அவசியமாக இருந்தது; இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தாவிட்டால், பாவமன்னிப்பு இல்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள அது உதவியது. பாவத்திற்கான தண்டனை மரணம் என்பது அதிர்ச்சியான உண்மை. நாம் அனைவருமே பாவிகளானதால், மரிக்கவேண்டியவர்களானோம். பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்த இயேசு நம் பாவங்களுக்கு தண்டனையாக மரித்ததினால், அதிலிருந்து தப்பியுள்ளோம். பாவஞ்செய்தவன் தனக்கென ஒரு பலிமிருகத்தைக் கொண்டுவந்து, தன் கைகளாலே அதைக் கொல்லவேண்டும். லேவி 1:4,5. நம் பாவங்கள் இயேசுவுக்கு மரணத்தைக் கொண்டுவர இருந்ததை அது மக்களுக்கு உணர்த்தியது. அதனால், இரட்சிப்புக்காக அவர்கள் சிலுவையை எதிர்நோக்கிப் பார்த்தார்கள்; நாம் இரட்சிப்புக்காக சிலுவையைப் பின்னோக்கிப் பார்க்கிறோம். இரத்தஞ்சிந்துதலைத் தவிர இரட்சிப்புக்கு வேறெந்த வழியும் இல்லை.

**9. பாவத்திற்காக மிருகங்கள் பலியிடப்பட்டபோது, பாவம் என்னவானது?**

**லேவியராகமம் 1:4.** *அது தன்* ______________ *அங்கிகரிக்கப்படும்படி தன்* __________ *அதின் தலையின்மேல் வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லக்கடவன்.*

**குறிப்பு:** மிருகத்தின் தலைமேல் கைவைத்து, பாவி தன் பாவங்களை அறிக்கைசெய்தது, அந்தப் பாவங்கள் பாவியிடமிருந்து மிருகத்திடம் சென்றதற்கு அடையாளமாயிருந்தது. அதனால், அந்த மிருகம் குற்றமுள்ளதானதால், அது மரணதண்டனையைப் பெறவேண்டியிருந்தது. நம் பாவங்களை இயேசு சுமக்க இருந்ததை அது சுட்டிக்காட்டியது.

**10. சபைமுழுவதற்கும் சேர்த்து, ஒரு மிருகம் பலியிடப்பட்டபோது, பாவம் என்னவானது?**

**லேவியராகமம் 4:17.** *தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில்* __________ *எதிரே ஏழுதரம்* __________.

**குறிப்பு:** ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த திரையின்மேல் ஆசாரியன் கொஞ்சம் இரத்தத்தைத் தெளித்தான்; பாவம் மக்களிடமிருந்து ஆசரிப்புக்கூடாரத்திற்குச் சென்றதற்கு அது அடையாளமாயிருந்தது. இயேசுவின் நாமத்தினால் நாம் பாவ அறிக்கைசெய்தால், நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பதைக் காட்ட (1யோவான் 1:9) இயேசு தாம் பரலோகம் சென்றதுமே தம் இரத்தத்தைக் காண்பித்தார். (முற்காலப் பிரதான ஆசாரியர்கள் செய்ததுபோல).

**11. இயேசு நமக்காக நிறைவேற்றும் என்ன இரண்டு காரியங்களை ஆசரிப்புக் கூடாரம் சுட்டிக்காட்டியது?**

**1கொரிந்தியர் 5:7.** *நம்முடைய* ______________ *கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே.*

**எபிரெயர் 4:14.** *வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா* __________ *ஆசாரியர் நமக்கு இருக்கிறார்.*

**குறிப்பு:** இயேசு நம் பாவங்களுக்கான பலியாகவும், நம் பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார்; அதன் மூலம் இரண்டு அற்புதமான விஷயங்களை நமக்காகச் செய்திருக்கிறார். முதலில், நம் பாவங்களை மன்னித்து, மறுபிறப்பு எனும் புதுவாழ்வைத் தருகிறார். யோவான் 3:3–6; ரோமர் 3:25. இரண்டாவது, இப்போதும் மறுமையிலும் நாம் சரியான வாழ்க்கை வாழ்வதற்கான வல்லமையைத் தருகிறார். தீத்து 2:14; பிலிப்பியர் 2:13. இந்த இரண்டு விஷயங்களும் ஒரு மனிதனை நீதிமானாக்கி தேவனோடு நல்லுறவுகொள்ளச் செய்கிறது. எந்த மனிதனும் தன்னுடைய கிரியைகளால் (தன் சொந்த முயற்சிகளால்) நீதிமானாக முடியாது. ஏனென்றால், இயேசு மாத்திரமே தரக்கூடிய கிருபையால்தான் நீதி கிடைக்கிறது. அப்போஸ்தலர் 4:12. இதுதான் விசுவாசத்தினால் உண்டாகும் நீதி; ஒரே மெய்யான நீதி.



**12. இயேசு அருளும் நீதிபற்றி வேதாகமம் கூறும் ஆறு அற்புத வாக்குத்தத்தங்கள் யாவை?**

**1யோவான் 1:9.** *நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும்* ______________ *நம்மைச் சுத்திகரிக்கிறார்.*

அ. *நம்முடைய கடந்தகாலப் பாவங்களை மன்னித்து, நம்மைக் குற்றமற்றவர்களாக எண்ணுவார். (ஏசாயா 44:22; 1யோவான் 1:9).*

ஆ. *நம்மை தேவசாயலில் மீண்டும் புதுப்பிப்பதாக இயேசு வாக்குரைக்கிறார். (ரோமர் 8:29).*

இ. *தேவ சித்தத்தைச் செய்யும் ஆசையையும் வல்லமையையும் இயேசு நமக்குக் கொடுக்கிறார். (பிலிப்பியர் 2:13).*

ஈ. *தேவனுக்குப் பிரியமான காரியங்களைமாத்திரமே செய்யும்படி இயேசு நமக்கு உதவுகிறார். (எபிரெயர் 13:20,21; 1யோவான் 3:22).*

உ. *அவர் பாவமற்றவராக வாழ்ந்து, நமக்காக மரித்த புண்ணியத்தின்நிமித்தம் நித்திய மரணத்திலிருந்து நம்மைக் காப்பாற்றியிருக்கிறார். (2கொரி 5:21).*

ஊ. *தாம் வரும்வரை நம்மை உண்மையுள்ளவர்களாக இருக்கச்செய்யும் பொறுப்பை இயேசு ஏற்றுக்கொண்டுள்ளார். (பிலிப்பியர் 1:6; யூதா 24).*

**குறிப்பு:** மகிமையான இந்த வாக்குத்தத்தங்களை எல்லாம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேற்ற இயேசு ஆயத்தமாக இருக்கிறார். நீங்கள் ஆயத்தமா? இப்போதே முழங்காலிட்டு, உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள். அவர் உங்களைக் கைவிடமாட்டார்.

**13. நீதிமானாக்குவதில் மனிதனின் பங்கு ஏதாவது இருக்கிறதா?**

**மத்தேயு 7:21.** *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின்* ______________ ______________ *பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*

**குறிப்பு:** ஆம், நம்முடைய இருதயங்களையும் சித்தத்தையும் இயேசுவுக்கு நேராகத் திருப்புவதும், அவர் நம்மை அரசாளும்படி அனுமதிப்பதும்தான் நம் வேலை. நம் வாழ்க்கையை முற்றிலும் அவரிடம் அர்ப்பணித்து, அவரை நம்பவேண்டும். தாங்கள் எப்படிப்பட்டவர்களாக நடந்துகொண்டாலும், இயேசுவின் பெயரை மாத்திரம் சொன்னால், அவர் தங்களைப் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்வாரென்று சிலர் நினைக்கிறார்கள். இது மிக தவறானநம்பிக்கை. இதில் உண்மை இல்லை. மத்தேயு 7:14.

**14. பாவநிவாரண நாளில் என்ன நிகழ்ந்தது?**

**லேவியராகமம் 16:30.** *கர்த்தருடைய சந்நிதியில் உங்கள்* ______________ *நீங்கிச் சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச்* ______________ *பொருட்டு, உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும்*

**குறிப்பு:** பாவநிவாரண நாள் என்பது நியாயத்தீர்ப்பின் நாள்; வருடத்திற்கு ஒருமுறை இஸ்ரவேலில் அது நடைபெற்றது. லேவி 23:27. ஒவ்வொரு பாவத்தையும் அறிக்கைசெய்து, விட்டுவிடவேண்டும். அவ்வாறு செய்ய மறுத்தவர்கள் அன்றைய தினமே இஸ்ரவேலின் பாளயத்திலிருந்து அறுப்புண்டு போவார்கள். வச 29. அன்று, இரண்டு ஆடுகளைத் தேர்ந்தெடுப்பார்கள். ஒன்று ஆண்டவருடைய ஆடு; இன்னொன்று சாத்தானைச் சுட்டிக்காட்டிய போக்காடு. லேவி 16:7,8. ஆண்டவருடைய ஆடானது, மக்களுடைய பாவங்களுக்காகப் பலியிடப்பட்டது. வச 9. அதன் இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுசெல்லப்பட்டு, கிருபாசனத்திற்குமுன்பாகவும், அதன் மேலேயும் தெளிக்கப்பட்டது. வச 14. இந்த விசேஷித்த நியாயத்தீர்ப்பின் நாளில் மட்டும்தான் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வான். தெளிக்கப்பட்ட இரத்தத்தை (இயேசுவின் பலியைச் சுட்டிக்காட்டியது) தேவன் ஏற்றுக்கொண்டார்; மக்கள் அறிக்கையிட்ட பாவங்கள் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து பிரதான ஆசாரியனிடம் சென்றது. அறிக்கை செய்யப்பட்ட பாவத்தை, அவன் தன்னிடமிருந்து பிறகு போக்காட்டுக்கு மாற்றுவான்; அது வனாந்தரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே விட்டுவிடப்படும். வச 16,20,22. இப்படியாக, முந்தின வருடம் முழுவதும் தெளிக்கப்பட்ட இரத்தத்தின் மூலம் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் சென்ற மக்களுடைய பாவங்கள், அடையாளமாகச் சுத்திகரிக்கப்பட்டது.



**15. முற்காலத்தில் நடைபெற்ற பாவநிவாரணநாள், இப்போது பரலோக ஆசரிப்புக் கூடாரம் சுத்திகரிக்கப்படுவதற்கு அடையாளமாக இருக்கிறதா?**

**எபிரெயர் 9:23.** *ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது;* ____________________ *இவைகளிலும்* ______________ *பலிகளாலே சுத்திகரிக்கப்பட்டவேண்டியதாமே.*

**குறிப்பு:** ஆம்! பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் நம்முடைய பிரதான ஆசாரியனாக இருக்கும் இயேசுவினால் பாவம் சுத்திகரிக்கப்பட்டதை அந்நாளின் ஆராதனைகள் சுட்டிக்காட்டின. தம்முடைய மக்களுக்காகப் பரிந்துபேசவும், சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தை விசுவாசிக்கிற அனைவருடைய பாவத்தையும் மன்னித்து ஒழிக்கவும் அவர் அங்கு இருக்கிறார். நவீன இஸ்ரவேலின் யாம் கிப்பூரைப்போல, முற்காலப் பாவநிவாரண நாளும் இப்பூமிக்காக நடைபெற இருக்கும் இறுதி பாவநிவாரணநாளைச் சுட்டிக்காட்டியது. இறுதிப் பாவநிவாரண நாள்தான், இறுதி நியாயத்தீர்ப்பின் நாளாக இருக்கும்; ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலுமிருந்து பாவப்பிரச்சனையை அது நிரந்தரமாக நீக்கிவிடும். பரலோக நியாயவிசாரணை துவங்கும் நாள்பற்றி தேவன் சொல்லியிருக்கிறார்; அதை நம்முடைய அடுத்த பாடத்தில் படிப்போம். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா!

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

உங்களை நீதிமானாக்கும் அற்புதத்தை இயேசு நிகழ்த்தும்படி, உங்களை முற்றிலும் அவருடைய கரங்களில் ஒப்படைக்க நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா?

**பதில்:** ____________________________________________

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com